<u>DEPOSITION OF WITNESS</u>
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, DHARAPURAM

**SC. No: 37/2022 Deposition of Witness for : P.W. 18**

| | | | |
|---|---|---|---|
| Name | : நந்தகோபால் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Age | : | Taluk | : |
| Village | : | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 11.04.2023

**All Accused present.**

<u>முதல் விசாரணை</u>

(சாட்சி பட்டியல் படி LW 15 ஆக காட்டப்பட்டு அசா 18 ஆக விசாரிக்கப்பட்டார்)

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது அலங்கியம் கிராம நிர்வாக அலுவலராக உள்ளேன். 19.10.2021 அன்று அலங்கியம் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது மாலை 6.30 மணியளவில் நான் எனது அலுவலகத்தில்தாராபுரம் காவல் ஆய்வாளர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு திருமலைபாளையம் விவேகம் பள்ளி பேருந்து நிறுத்தம் அருகே 3 பேரை கைது செய்திருப்பதாகவும் நேரில் வருமாறு அழைத்தார். நான் எனது இருசக்கர வாகனத்தில் பேருந்து நிறுத்தம் சென்றேன். அப்போது எங்கள் ஊரை சேர்ந்த மாயவன் என்பவர் அந்த வழியாக வந்தார். நாங்கள் இருவரும் ஆய்வாளர் முன்பு நின்று கொண்டிருந்தோம். அப்போது ஆய்வாளர், 3 காவலர்கள், நீதிமன்றத்தில் இருக்கும் 2 எதிரிகள் சந்துரு, சதீஸ் ஆகும். மஞ்சள் கலர் சட்டை அணிந்திருப்பவர் சந்துரு ஆகும்.

வெள்ளை சட்டை அணிந்திருப்பவர் சதீஸ் ஆகும். இது அல்லாமல் இளவர் பையன் ஒருவன் இருந்தார். அவர் பெயர் கவின். சந்துரு ஒரு ஸ்டேட்மெண்ட் வழங்கினார், அதை லேப்டாப்பில் பதிவு செய்தார்கள். சந்துரு ஆய்வாளரிடம் 16.10.2021 அன்று மாலை 5.30 மணிக்கு கோயில் திருவிழாவிற்கு போனதாகவும் அப்போது ஆடிக்கொண்டு வந்ததாகவும் மீனாட்சி மற்றும் அவரது மகள் மீது மோதியதாகவும் அதை சுப்ரமணி தட்டி கேட்டதாகவும் சொன்னார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். 2 வது கையெழுத்து மாயவன் கையெழுத்து ஆகும். கையெழுத்து மட்டும் அசாஆ.16. கையெழுத்தை நாங்கள் அந்த இடத்தில் போடவில்லை. மேலும் அவர் சம்பவ இடத்திற்கு அழைத்து செல்வதாகவும் சம்பவத்தின் போது தனது சட்டையில் ரத்தம் பட்டதை எடுத்து ஆஜர் செய்வதாகவும் சொல்லி அவரது பெரியப்பா வீட்டிற்கு அழைத்து சென்றார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் " எனது ரத்தக்கறை படிந்த சட்டையை மறைத்து வைத்துள்ள இடத்தையும் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்கிறேன் " என்று சொன்னார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.17. பின்னர் சம்பவ இடத்திற்கு அழைத்து சென்றார். அடையாளம் காட்டினார். அங்கிருந்து பெரியப்பா முருகன் வீட்டிற்கு அழைத்து சென்றார். சட்டையை எடுத்து ஆஜர் செய்தார். ஆடு கட்டி வைத்திருந்த இடத்திலிருந்து எடுத்து கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றும் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகஜர் அசாஆ.18. மாயவன் 2 வது கையெழுத்து போட்டார். கருப்பு சிவப்பு வெள்ளை கலந்த சட்டை ஆகும். அந்த சட்டை என்னிடம் காட்டப்படுவது தான். அது சாபொ.3. என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை  எதிரிகள் தரப்பில்</u>**

எங்கள் அலுவலகத்திற்கும் விவேகம் பள்ளி பேருந்து நிறுத்ததிற்கும் சுமார் 10 கிமீ இருக்கும் என்றால் சரிதான். ஆய்வாளர் என்னிடம் தகவல் சொன்னபோது 3 நபர்களை பிடித்து வைத்திருப்பதாக சொன்னாரா என்றால் ஆமாம். விவேகம் பள்ளி பேருந்து நிறுத்தம் ஊத்துபாளையம் கிராம நிர்வாக அலுவலக எல்லைக்குட்பட்டது என்றால் ஆமாம். அதிலிருந்து 1 கிமீ தூரத்தில் சித்தராவுத்தன்பாளையம் கிராம எல்லை வருகிறது என்றால் ஆமாம். அதே போல் தெற்கில் 1 கிமீ தூரத்தில் தளவாய்பட்டினம் கிராம அலுவகம் உள்ளது என்றால் ஆமாம். மேற்சொன்ன 3 கிராம நிர்வாக அலுவலகம் சுமார் 4 கிமீ சுற்றளவில் அமைந்துள்ளது என்றால் சரிதான். உள்ளூர் கிராம நிர்வாக அலுவலரை அழைக்காமல் என்னை அழைத்தற்கு ஏதேனும் சிறப்பு காரணம் உண்டா என்றால் அதுபற்றி அவர் கூறவில்லை. வேறு கிராம எல்லைக்கு செல்லும்போது வட்டாச்சியரின் முன்அனுமதி பெறவேண்டும் அல்லது சென்று விட்டு வந்தபிறகு தகவல் சொல்லவேண்டும் என்றால் சரிதான். மேற்படி ஆய்வாளர் தான் அலங்கியத்திற்கும் தாராபுரத்திற்கும் ஆய்வாளர் ஆவார். போலீசார் விசாரணையில் வட்டாச்சியரிடம் தகவல் சொன்ன விவரத்தை சொன்னேனா என்றால் இதை பற்றி அவர்கள் கேட்கவில்லை. நான் தகவல் கிடைத்தவுடன் அந்த இடத்திற்கு 10 நிமிடத்தில் சென்று அடைந்தேன். தளவாய்பட்டினம் ரோடு தனி திசையில் உள்ளது. அதே போல் அலங்கியம் ரோடு தனிதிசையில் உள்ளது என்றால் சரிதான். வழக்கிற்காக வேண்டி என்னுடன் சாட்சி கையெழுத்து போட்ட மாயவன் அந்த ரோட்டில் வந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் அவரை அழைத்தார்களா என்றால் தெரியவில்லை, ஆனால் என்னை பார்த்ததும் மாயவன் என்னிடம் வந்தார். மாலை 6 மணி என்பது

அந்த இடத்தில் பொதுமக்கள் அதிக அளவில் கூடும் இடம் என்றால் அந்த நேரத்தில் அதிகம் இல்லை. நாங்கள் சென்றபோது ஆய்வாளர், காவலர்கள், எதிரிகள் தவிர வேறு பொதுமக்கள் இருந்தார்களா என்றால் இல்லை. ஒப்புதல் வாக்குமூலம் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பிரிண்ட் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். கைப்பற்றும் மகஜர் தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் இல்லை, கையால் எழுதப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலம் யார் எழுதியது என்றால் எழுதவில்லை சொல்ல சொல்ல தட்டச்சு செய்யப்பட்டது. பிரிண்ட் காவல்நிலையத்தில் எடுக்கப்பட்டது என்றால் ஆமாம். பிரிண்ட் எடுத்தபிறகு காவல்நிலையத்தில் கையொப்பம் செய்யப்பட்டது என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் அழைத்து நான் விவேகம் பள்ளி பேருந்து நிறுத்தம் போனதாகவும், எதிரிகள் இருந்ததாகவும் வாக்குமூலம் கொடுத்ததாகவும், எங்களை அழைத்து சென்றதாகவும், சாபொ.3 ஐ எடுத்து ஆஜர் செய்ததாகவும் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசாஆ.16 முதல் அசாஆ.18 சொன்ன நேரத்தில் சொன்ன இடத்திலும் சொன்ன விதத்திலும் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. நான் கிராம நிர்வாக அலுவலராக இருப்பதால் ஆய்வாளர் கோரிக்கை படி நிலையத்தில் தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் எப்போதும் போல் கையெழுத்து போட்டு உதவி உள்ளேன் என்றால் சரியல்ல.

ஒப்பம் / எஸ்.நாகராஜன்
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி
தாராபுரம்.